අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/12/07/02/01 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2019.04.09

**சுற்றுநிருப இல :- 19/2019**

மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
கோட்டங்களுக்குப் பொறுப்பான பி.க.ப/ உ.க.ப களுக்கும்,
அதிபர்களுக்கும்

**பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புரீதியான, அளவுரீதியான, கட்டமைப்பு ரீதியிலான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கைந்நூலினைத் திருத்தம் செய்தல்.**

எனது மேற்படி சம இலக்கமிடப்பட்டதும் 2019.01.29 திகதியிடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 2018.06.22 திகதியிடப்பட்ட இலக்கம் 26/2018 கொண்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புரீதியான, அளவுரீதியான, கட்டமைப்பு ரீதியிலான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கைந்நூல் கீழே குறிப்பிடப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு இதன் பின்னர் நடைமுறைக்கு வரும். அத்துடன் 2015.01.29 திகதியிடப்பட்ட இலக்கம் 05/2015 கொண்ட பாடசாலைகளில் முறைகேடான விதத்தில் பணம் அறவிடுதலை தடைசெய்தலுக்கான சுற்றுநிருபத்தின் ஒழுங்குவிதிகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

2. அதற்குரிய திருத்தங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய செயற்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

**2.1.** சுற்றுநிருபத்தின் 4 (ii) மற்றும் (**iv**) பகுதி நீக்கப்பட்டுள்ளது. 4 (ii) இற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாடசாலை அபிவிருத்திக் குழு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு என்பதாகப் பெயரிடப்பட்டு அதன்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மற்றும் அதற்குரிய குழுக்களின் அலுவலர்களின் பதவிக் கால முடிவின்பின் வழிகாட்டல் கைந்நூலில் 4.0 குறிப்பிடப்பட்டுள்ளதன்படி புதிய அலுவலர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**2.2.** வழிகாட்டல் கைந்நூலில் 4.1.3.3 என புதிய பகுதியொன்று உட்சேர்க்கப்பட்டுள்ளது.

4.1.3.3 இங்கு ஒரு குடும்ப அலகொன்றிலிருந்து அறவிடமுடிவது ஒரு அங்கத்துவக் கட்டணம் மாத்திரமேயாகும்.

**2.3.** வழிகாட்டல் கைந்நூலின் 4.2.4.(**iii**) பகுதியில் "அப்படியே தெரிவு செய்யப்படக்கூய எந்தச்சந்தர்ப்பத்திலும் பழைய மாணவர் அல்லாத பெற்றோரை உறுப்பினராக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

"எந்தச் சந்தர்ப்பங்களிலும் பெற்றோர் பிரதிநிதித்துவத்தில் 75% னோர் பழைய மாணவரல்லாத பெற்றோராயிருத்தல் வேண்டும்.

2.4 வழிகாட்டல் கைந்நூலில் 4.2.4.3 பகுதி நீக்கப்பட்டு அதற்குபட பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு கூட்டக் கோரம் அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மூன்றில் இரண்டாக (2/3) இருப்பதுடன் (தலைவர்

தவிர) ஏதேனும் ஒரு பிரச்சனைக்குத் தீர்மானம் எடுக்கும்போது ஏகமனதாக தீர்மானம் இல்லாத விடத்து கூட்டத்திற்கு வந்தவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

**2.5.** வழிகாட்டல் கைந்நூலில் 4.2.5.1. (ஈ)பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

பாடசாலையின் அனுமதிக்கப்பட்ட வருடாந்த திட்டத்திற்கு மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் அச்செயற்றிட்டத்திற்கு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின்/ தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**2.6** வழிகாட்டல் கைந்நூலில் 4.7 பகுதியின் வகுப்பு வட்டம், உப குழு மற்றும் செயற்றிட்டக்குழு ஸ்தாபித்தலின் கீழ் 4.7.1, 4.7.2, 4.7.3 மற்றும் 4.7.4 போன்ற பகுதிகள் நீக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்ட பகுதி பதிலீடாக இணைக்கப்படுகின்றது.

4.7 பாடசாலையின் தேவைக்கேற்ற வகையில் மாணவர்களின் கல்விப் பண்புசார் அபிவிருத்திக்குக் காரணமான வகுப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடையே இடைத்தொடர்பு பேணிவருவதற்கு தற்காலிகமாக குழுவொன்றை ஸ்தாபித்துக் கொள்ள முடிவதுடன், நியமிக்கப் பெற்ற குழு தொடர்பான முறையான ஆவணங்கள் பேணிவருதல் வேண்டும். உரிய செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் உடனடியாக அக்குழுவை முடிவுறுத்தல் வேண்டும். வகுப்பு வட்டம், உபகுழுவின் ஊடாக பெற்றோரிடமிருந்து எந்தவொரு நிதியும் அறவிடப்படாதிருத்தல் வேண்டும். இது தொடர்பாக அதிபரினால் கவனித்துக் கொள்ள வேண்டும்.

**2.7** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (ஆ) ல் வெளி நிதியங்களின் கீழ் வரும் “S6 பெற்றோரிடமிருந்து/ நலன் விரும்பிகளிடமிருந்து/ பழைய மாணவர்கள் சங்கத்திடமிருந்து அன்பளிப்பாக” எனும் பகுதி நீக்கப்பட்டு “நலன் விரும்பிகளிடமிருந்து அன்பளிப்பாக” என்றவாறு இணைக்கப்படுகின்றது.

**2.8** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் கீழ் வரும் “S7 பாடசாலைக் காணி மற்றும் கட்டிடங்களிலிருந்தும் பிற மூலங்களிலிருந்தும் கிடைக்கும் பணம்” எனும் பகுதி நீக்கப்பட்டு “பாடசாலைக்குரிய சொத்துக்களிலிருந்து சம்பாதித்துக்கொள்ளும் வருமானம்” என்றவாறு இணைக்கப்படுகின்றது.

**2.9** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் கீழ் வரும் “S8 பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அங்கத்துவப் பணம்” எனும் பகுதி நீக்கப்பட்டு “பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அங்கத்துவப் பணம் 4.1.3.2 பகுதிக்கு அமைய அறவிடப்பட வேண்டும்” என்றவாறு இணைக்கப்படுகின்றது.

**2.10** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் கீழ் வரும் “S9 பாடசாலையின் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் வருமானம் (உதாரணம் - கல்விக் களப்பயணம், ஆசிரிய செயற்றிட்டம், மாணவர் செயற்றிட்டம், மதிப்பீடு, விளையாட்டு, பாட இணைச் செயற்பாடுகள், மற்றும் ஏனைய செயற்பாடுகள் முதலியன)” எனும் பகுதி நீக்கப்பட்டு “பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்குரிய அத்தியாவசிய செயற்பாடுகளுக்கு அத்தியாவசிய கிடைப்பனவுகள்” என்றவாறு இணைக்கப்படுகின்றது. இந்த நிதியானது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்குடன் இணைக்கப்பட்டு அதிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**2.11** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் கீழ் வரும் குறிப்பு இலக்கம் ii ஆகிய "S9 ன் படி கிடைக்கும் வருமானத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் முறைமைகளை பாடசாலை அபிவிருத்திக் குழு உருவாக்கிக் கொள்ள முடியும்'' எனும் பகுதி இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக "S9 ற்கு உரிய செயற்பாடுகள் பாடசாலையின் அனுமதிக்கப்பட்ட வருடாந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அதற்காக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின்/ தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். செயற்றிட்டம் நிறைவடைந்த பின்னர் உரிய முன்னேற்ற அறிக்கையினை அனைத்து ஆவணங்களுடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு/ தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்'' என்றவாறு இணைக்கப்படுகின்றது.

**2.12** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் கீழுள்ள S 10 பகுதியான "பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் தீர்மானிக்கப்படும் ஏனைய நிதிகள்'' என்பது இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 5/2015 சுற்றுநிருபத்தின் 5 மற்றும் 6 பகுதி உரியதாக்கப்படல் வேண்டும்.

**2.13** வழிகாட்டல் கைந்நூலில் 7.1. (இ) ல் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதியத்தின் குறிப்பு III இரத்துச் செய்யப்படுகின்றது.

**2.14** வழிகாட்டல் கைந்நூலில் 7.2 பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

"மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூலங்களினூடாக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும்போது பெற்றோரிடம் எவ்வித கட்டாயப்படுத்தல்களோ அல்லது வற்புறுத்தல்களோ மேற்கொள்ளப்படாதிருக்க வேண்டியதோடு கிடைக்கப்பெறும் நிதியானது வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதியுடன் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்''. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நிதிகளும் பாடசாலையினுள் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை நடைமுறைப் படுத்துவதற்காக பயன்படுத்தும் போது அரச நிதி நடைமுறைகள் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரினால்/ மாகாணக் கல்வி அதிகார சபையினால் விதிக்கப்பட்ட நடைமுறைகள், சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் சட்ட விதிகளை மீறி இந்நிதியை செலவு செய்யாதிருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மாணவர்களிடமிருந்தோ, பெற்றோரிடமிருந்தோ அல்லது வேறு வெளி அமைப்புக்களிடமிருந்தோ நிதியுதவி திரட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும்

**2.15** வழிகாட்டல் கைந்நூலில் 9.6 பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

"சகல ஆண்டுகளிலும் ஆகஸ்ட் மாத இறுதிக்கு முன்னர் அடுத்த வருட வரவு செலவு ஆவணம் உள்ளிட்ட வருடாந்த அமுலாக்கல் திட்டத்தை தயாரித்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் 15 க்கு முன்னர் பாடசாலை அபிவிருத்தி சங்க விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டி அதில் அனுமதிக்கப்பட்டு நவம்பர் 30 க்கு முன்னர் கல்வி அமைச்சு/ மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் 5/2015 சுற்றுநிருபத்தின் 7ம் பகுதியில் குறிப்பிட்டதன்படி அனுமதியைப் பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும்''.

**2.16** வழிகாட்டல் கைந்நூலில் 9.8 பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி இணைக்கப்படுகின்றது.

வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக அச் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை பூர்த்தி செய்துகொள்வதற்கு செலவுத் தலைப்பொன்றில் போதுமானளவு நிதி இல்லாவிடில் நிதி மிகுதியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் (அச் செலவுத் தலைப்பின் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் மாத்திரம்) வேறு செலவுத் தலைப்பொன்றின் நிதியை மாற்றிக்கொள்ளுதல் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட முடியும்.

(அ) மீண்டெழும் செலவு விடயமொன்றின் மிகுதியொன்றை மீண்டெழும் செலவு விடயத்திற்காக மாற்றிக்கொள்ள முடியும்.

(ஆ) மீண்டெழும் செலவு விடயமொன்றின் மிகுதியொன்றை மூலதன செலவு விடயத்திற்காக மாற்றிக்கொள்ள முடியும்.

(இ) மூலதன செலவு விடயமொன்றின் மிகுதியொன்றை மூலதன செலவு விடயத்திற்காக மாற்றிக்கொள்ள முடியும்.

(ஈ) **மூலதன செலவு விடயமொன்றின் மிகுதியொன்றை மீண்டெழும் செலவு விடயத்திற்காக மாற்றிக்கொள்ள முடியாது.**

**2.17** வழிகாட்டல் கைந்நூலில் "செலவுத் தலைப்பு" எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் அது "செலவு விடயம்" என இணைக்கப்படுகின்றது.

**2.18** வழிகாட்டல் கைந்நூலில் 10.2 பகுதி நீக்கப்படுவதுடன் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

10.2 (அ) விசேட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசினால் வழங்கப்பட்ட மானியங்களைத் தவிர பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் விசேட செயற்பாடுகளுக்காக அந்தக்காரணங்களுக்காக ஈட்டப்பட்டுள்ள மானியங்கள் அவ்வருடத்தினுள் செலவளிக்கப்பட வேண்டியதுடன் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் செலவளிக்க முடியாமல் போகுமிடத்து, அந்த எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் வரை பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் குறுகிய காலத்திற்கு, 03 மாதங்களுக்கு மேற்படாதவாறு அரச வங்கியொன்றில் முதலீடு செய்ய முடியும். முதலீடு தொடர்பான விபரங்களை உள்ளடக்கி இணைப்பு இலக்கம் 23 ன் படி நிலையான வைப்பு ஆவணமொன்றை பேணிவரல் வேண்டும்.

10.2 (ஆ) தற்போது பாடசாலைகளில் காணப்படும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய நிலையான வைப்புகளில் உள்ள நிதி பாடசாலையின் அத்தியவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்கு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளரின்/ மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

எம். என். ரணசிங்ஹ,
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல்கள் அமைச்சு
3. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
4. செயலாளர், நிதி ஆணைக்குழு
5. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
6. அனைத்து மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
7. பிரதம நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
8. பிரதம உள்ளக கணக்காய்வு, கல்வி அமைச்சு
9. அனைத்துக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு